www.tamilarangam.net

தமிழீழ மக்கள் கட்சி
சுதந்திரம் — தமிழீழம் — சமத்துவம்

# எழுச்சியுறும் நம் மாணவர்!

மட்டுநகரில் சிங்களப் படைகள் நடத்திய இனப்படுகொலைகளை எதிர்த்து சுதந்திர மாணவர் முன்னணி நடாத்திய பெருமைக்குரிய ஹர்த்தால் போராட்டத்திற்கும், இப்படுகொலைகளை கண்டித்து வவுனியாவில் நடாத்தப்படவுள்ள கண்டனப் போராட்டத்திற்கும் தனது முழுமையான ஆதரவை தமிழீழ மக்கள் கட்சி தெரிவிக்கின்றது.

சிங்களப் படைகளின் அடக்குமுறைகளையும் அச்சுறுத்தல்களையும் துச்சமாக ஒதுக்கி மட்டக்களப்பில் நமது மாணவர்கள் முன்னெடுத்த இப்போராட்டத்திற்கு நமது மக்கள் மாபெரும் ஆதரவை துணிவுடன் அளித்துள்ளார்கள். இத்தகைய மகத்தான ஆதரவை வவுனியாவில் நடாத்தப்படவுள்ள போராட்டத்திற்கும் நமது மக்கள் நிச்சயம் வழங்குவார்கள்.

மே 17 இல் சிங்கள படையினர் மறுபடியும் நமது மக்களை தென் தமிழீழத்தில் கொன்று குவித்துள்ளனர். சிறுவர்கள், மாணவர்கள் அடங்கலாக நமது மக்களில் பலரை மிலேச்சத்தனமாக வேட்டையாடியுள்ளனர். வட தமிழீழத்தின் தோல்வியின் அவமானம் தாங்க முடியாது சிங்கள ஆக்கிரமிப்பு படையினர் நிராயுதபாணிகளான நம்மக்களை கோழைத்தனமாக பலி தீர்த்துள்ளனர். காரைதீவு, கொக்கட்டிச்சோலை, குமரபுரம், இருதயபுரம், போன்ற இடங்களில் சிங்களப் படையினரால் நிகழ்த்தப்பட்ட கூட்டுப்படுகொலைகளின் மற்றுமொரு தொடர்ச்சி இதுவாகும்.

இந்த இனப்படுகொலைகளை எதிர்த்து நமது மாணவர்கள் முழு வலிவுடன் திரண்டெழுந்து, தம் ஆற்றலை மீண்டும் நிரூபித்துள்ளார்கள். இதன் மூலம் நமது போராட்டத்தில் தமது புரட்சிகரப் பங்கேற்பை எழுச்சியுடன் கட்டியம் கூறியுள்ளார்கள். சிங்களப் படைகளின் ஆதிக்க இருப்பையே உலுக்கும் விதத்தில், நமது மாணவர்கள் திட்டமிட்டும் இரகசியமாகவும் வெற்றிகரமாகவும் இப்போராட்டத்தை நடாத்தியுள்ளார்கள். சிங்களப் படைகளினால் தமது உயிருக்கே ஆபத்து ஏற்பட்டிருந்த நிலையிலும் நமது மாணவர்கள் இப்போராட்டத்தை துணிவுடன் முன்னின்று நடாத்துகின்றார்கள். இவ்வகையில், நமது மாணவர்களிடையே கனன்று எரியும் தேசிய உணர்ச்சியின் முன்னால், சிங்களப் படைகளின் அதிகாரப்பிடி அர்த்தமற்றதாக்கப்பட்டுள்ளது. இப்போராட்டத்தின் மூலம் எத்தகைய ஆபத்துக்களையும் துணிவுடன் எதிர்கொள்ளும் நிகரற்ற வலிமையை நமது மாணவர்கள் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

இந்தப் போராட்டத்திற்கு நமது மக்கள் வழங்கியிருக்கின்ற மகத்தான ஆதரவு, சிங்களப் படைகளின் அதிகார முகத்தின் மீது ஓங்கி அறைந்துள்ளது. இந்த ஆதரவு ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராக நமது மக்களிடையே எரிந்து கொண்டிருக்கும் ஆவேசத் தீயின் துல்லியமான வெளிப்பாட்டைக் குறிக்கின்றது. நமது மக்களின் இந்த ஆவேசம் படையினரின் அச்சுறுத்தும் பிரச்சாரங்கள் அனைத்தையும் ஒதுக்கித் தள்ளும் வலிமை பெற்றது. இந்த ஆவேசம் நமது மக்கள் மீது மேற்கொள்ளப்படுகின்ற அத்தனை அடக்குமுறைகளையும் முழு வலிவுடன் எதிர்த்து தாங்கும் ஆற்றல் கொண்டது.

நம்மீதான அடக்குமுறைகளுக்கு எதிராக நாம் எண்ணற்ற வடிவங்களில், பல்வேறு தளங்களில் எமது போராட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். நம்தேசம் எங்கும் நம் மக்கள் வாழுமிடம் எங்கும் நாம் இவற்றை முன்னெடுக்க வேண்டும். ஒரே சமயத்தில் ஒரே இலக்குநோக்கி இவற்றை நாம் நடத்த வேண்டும். விடுவிக்கப்பட்ட, விடுவிக்கப்படாத பிரதேசங்களில் வாழ்கின்ற அனைத்து மக்களின் பங்களிப்புகளையும் இப்போராட்டங்களை நோக்கி நாம் ஒன்றுகுவிக்க வேண்டும். வட தமிழீழத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதல் எவ்வாறு சிங்களப் படைகளை நிலைகுலையச் செய்கின்றனவோ அதேபோன்று நமது வெகுஜனப் போராட்டங்களும் சிங்களப் படைகளின் ஆக்கிரமிப்பு வேரை அறுக்கும் சக்தி பெற்றவை. ஆயுதப் போராட்டமும் வெகுஜனப் போராட்டங்களும் ஒன்றுடன் ஒன்று இணைவது நமது மண்ணிலிருந்து சிங்களப் படைகள் வெளியேற்றப்படுவதை நிச்சயம் உறுதிப்படுத்தும்!

மட்டுநகர் மாணவர்கள் வெளிப்படுத்தியுள்ள துணிவு நம் தேசத்தின் வெகுஜனப் போராட்டங்களுக்கு என்றும் சுடர் விளக்காய் ஒளிரட்டும்! இந்த மகத்தான போராட்டம் நம் தேசமெங்கும் தீயாய்ப் பரவட்டும்!

எழுக வெகுசனப் போராட்டங்கள்!
வெல்க நம் விடுதலை!

BM Box 4002, London.
WC IN 3XX,
United Kingdom,
www.thamileelam.org
tmk@freeserve.co.uk

கொள்கைபரப்புபிரிவு
தமிழீழ மக்கள் கட்சி
தமிழீழம்
**24-05-2000**

**எமது இலட்சியம் சுதந்திர தமிழீழம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்